செயல்படுகின்ற அரசாக விளங்குகிறது. குடியிருக்க வீடு இல்லை என்கிற நிலையை அறிந்து நெசவாளர்கள் குடியிருக்கவும், குடியிருக்கும் வீடுகளில் நெசவுப் பட்டறை அமைக்கவும், 260 கோடி ரூபாயில் 10 ஆயிரம் விலையில்லா பசுமை வீடுகள் வழங்கியும், கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தியைப் பெருக்கிடவும், உற்பத்தியின்மூலம் அதிகக் கூலி கிடைக்கவும், 6,000 பெடல் தறிகள் ரூபாய் 24 கோடி விலையில் வழங்கியும், கைத்தறித் துறைக்கு சிட்டா நூல்கள் தங்கு தடையின்றிக் கிடைக்க, 25 ஆயிரம் மின் மோட்டார்கள் வழங்கியும், பட்டு உற்பத்தியை அதிகரிக்க Pneumatic Air Compressor உபகரணங்கள் வழங்கியும், நெசவாளர்களின் பொற்காலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு செயல்படுகிறது. காஞ்சிபுரத்தில் பழமையான ஆலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இன்றையதினம் பட்டுச் சேலையின் அழகினை மெருகூட்டுவதற்கு பார்டரில் சரிகை, புட்டாவில் சரிகை, முந்தியில் சரிகை, முகூர்த்தப் பட்டில் முழுவதுமாக சரிகை போன்று சரிகையினுடைய தேவையை அதிகப்படுத்துவதற்கு, நியாயமான முறையில், மக்களுக்கும், கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கும் கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நெசவாள மக்களுக்காக பல்வேறு திட்டங்களை வாரி வழங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், நெசவாள மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2013 அக்டோபர் 28]

40—

சொந்தக் கட்டடம்

*24060—**திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

முற்பகல் 11-05

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், வருங்கால பாரதம், மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி, கேள்வி எழுப்பப்பட்டு அந்தக் கேள்வி இந்தச் சபைக்கு வரும் முன்னரே வணிக வரி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட உத்தரவிட்டு, தற்போது கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வரம் கேட்கும் முன்னே வாரிக் கொடுக்கும் வள்ளலாக விளங்கிக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியை என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

தரம் உயர்த்துதல்

23952*—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, அழிச்சிக்குடி ஊராட்சி, வண்டுராயன்பட்டிலுள்ள ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, அழிச்சிக்குடி ஊராட்சிக்குட்பட்ட வண்டுராயன்பட்டிலுள்ள அரசு ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி, 2013-2014 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று தரம் உயர்த்தப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தை கண்ணை இமை காப்பதுபோல் காத்து, தமிழக மக்களின் வாழ்வொன்றே தன்னுடைய வாழ்நாளின் இலட்சியமாகக் கருதி, வருங்கால பாரதமாக விளங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும்*